பக்கங்கள்:-18

காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | மாசி 15 | புதன்கிழமை | 28.02.2024 | அதிர்வு 211

## தெற்கு அதிவேக வீதியில் இருவர் பரிதாப மரணம்!

தெற்கு அதிவேக வீதியின் குருந்துகஹ ஹெதெக்ம பகுதியில் நேற்று இடம்பெற்ற விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

அதிவேக வீதியில் பணிபுரியும் இருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

கொழும்பிலிருந்து மாத்தறை 06

# ஈழத் தமிழர்களுக்கு தனிநாடு வேண்டும்

## மோடியிடம் மதுரை பீடாதிபதி நேரில் கோரிக்கை




(நடராசா லோகதயாளன்)

"இந்தியாவால் இலங்கைக்கு வழங்கிய கச்சதீவை மீட்டெடுக்க வேண்டும். இலங்கையில் தமிழர் பகுதியை தனிநாடாக மாற்ற வேண்டும்."

- இவ்வாறு மதுரை ஆதீனத்தின் பீடாதிபதி, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியிடம் நேரில் கோரிக்கை விடுத்தார். 06

# யாழ். பல்கலை முன்றிலில் இன்று போராட்டம்

(எஸ்.நிதர்ஷன்)

நாடு முழுவதிலுமுள்ள அரச பல்கலைக்கழகங்களில் இன்றும் நாளையும் வேலைநிறுத்தப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ள நிலையில், போராட்டத்துக்கு ஆதரவு வழங்கும் முகமாக இன்று யாழ்ப்பாணம் பல்கலைக்கழக முன்றிலில் கவனவீர்ப்புப் போராட்டம் நடைபெறவுள்ளது என்று யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கம் அறிவித்துள்ளது.

அனைத்துப் பல்கலைக்கழகங்களிலும் பல்கலைக்கழக கல்விசாராப் பணியாளர்களின் சம்பள முரண்பாடு, சம்பள அதிகரிப்பு மற்றும் அவர்களைப் பாதிக்கும் பிரச்சினைகளுக்கு உரிய கால அவகாசங்கள் வழங்கப்பட்டும், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவும் அரசும் இதுவரை தீர்வை வழங்காதமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், உடனடித் தீர்வை வேண்டியும் வேலைநிறுத்தத்தில் ஈடுபடுவது என்றும், அதேசமயம் நாளை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் முன்னால் கவனவீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் யாழ். பல்கலைக்கழகத்திலும் இரு தினங்களும் வேலைநிறுத்தப் போராட்டத்தைப் பல்கலைக்கழக ஊழியர் சங்கம் மேற்கொள்ளவிருக்கின்றது.

அத்துடன் இன்று முற்பகல் 11 மணியளவில், யாழ் பல்கலைக்கழக முன்றலில் கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றையும் முன்னெடுப்பது என்றும், நாளை கொழும்பில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் முன்னால் நடைபெறவுள்ள கவனவீர்ப்புப் போராட்டத்திலும் கலந்துகொள்வது என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கம் அறிவித்துள்ளது.

# முன்னாள் நிதி அமைச்சர் ரொனி டி மெல் காலமானார்



முன்னாள் அமைச்சர் ரொனி டி மெல் நேற்றுக் காலமானார்.அவர் தனது 98 ஆவது வயதில் காலமாகியுள்ளார்.

கொழும்பிலுள்ள தனியார் மருத்துவமனையொன்றில் சிகிச்சை பெற்று வந்த நிலையிலேயே அவர் உயிரிழந்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியைப் பிரிதிநித்துவப் படுத்திய அவர், முன்னாள் நிதி அமைச்சராகச் செயற்பட்டிருந்தார். 06




'சாண் ஏற முழம் சறுக்கும்' என்பார்கள். இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வழக்கு, அதற்கு இணைக்கத் தீர்வு காணும் முயற்சி எல்லாம் இப்படி சாண் ஏற முழம் சறுக்கும் என்ற நிலைமையில் தான் சிக்கிக் கொண்டுள் என. தமிழர்களின் பரிதாபம் அதுதான். காலமும் – காலனும் – காலை இடற முனைப் பாகவே உள்ளனர்.

ஏற்கனவே இந்த வழக்குப் பிரச்சினையைச் சுமுகமாகத் தீர்க்கும் முயற்சி 06

# பராட்டே சட்டம் தொடர்பான திருத்தத்தை நாடாளுமன்றத்தில் சமர்பிக்க எதிர்பார்ப்பு

## அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தகவல்



"அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம், தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ள பராட்டே சட்டம் தொடர்பான திருத்தத்தை எதிர்காலத்தில் நாடாளுமன்றத்தில் சமர்பிக்க எதிர்பார்க்கப்படுகிறது. அத்துடன், சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளுக்கு தனியான கடன் திட்டமொன்றை அறிமுகப்படுத்தவும் எதிர்பார்க்கப்படுகிறது."

– இவ்வாறு நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.(கடன் வாங்குபவர்கள் கடனைத் திருப்பிச் செலுத்தாத நிலையில் அவர்களிடமிருந்து நிலம் மற்றும் சொத்துக்களை பறிமுதல் செய்ய வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களை அனுமதிக்கும் சட்டத்தையே பராட்டே சட்டம் என்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.)ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே விஜயதாஸ ராஜபக்ஷ மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

"நாடு ஒரு நிதிக் கொள்கையைக் கொண்டிருக்க வேண்டும். மேலும் பொருளாதாரமும் வலுவாக இருக்க வேண்டும். இந்த விடயத்தில் இலங்கை மத்திய வங்கிக்கு கணிசமான அதிகாரம் உள்ளது. கடந்த காலத்தில் இலங்கையில் கருத்தாடலுக்கு உட்பட்ட பரேட்டா சட்டம் பற்றி குறிப்பிடுவதென்றால், இவ்விடயத்தில் மத்திய வங்கி, நிதி நிறுவனங்களின் ஸ்திரத்தன்மையை பாதுகாப்பதில் மாத்திரமே கவனம் செலுத்தியது.

நாட்டின் கையிருப்பு நிலை குறித்து மத்திய வங்கி கவனம் செலுத்தியதா என்று பல தரப்பினரும் கேள்வி எழுப்பினர். மேலும், விவசாயத் துறை 22 வீதம் – 8 வீதம் வரையிலும், தொழில் துறை 38 வீதம் – 32 வீதம் வரையிலும் வீழ்ச்சியடைந்துள்ளமை குறித்தும் கவனம் செலுத்த வேண்டும்.

சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து 17 முறை கடன் பெற வேண்டியிருந்தது. அவ்வாறு செய்தாலும் பொருளாதாரத்தை மீட்க முடியவில்லை. நாம் பொருளாதாரத்தில், சேவைத் துறையை தொடர்ந்து விரிவுபடுத்தியுள்ளோம். தொழில் துறை மீது காட்டப்பட்ட அலட்சியத்தால், உற்பத்தித் திறன் குறைந்துள்ளது.

இரண்டு அரச வங்கிகளினால் ஒவ்வொருவருக்கும் வழங்கப்பட்ட கடன் தொகை சுமார் 602 பில்லியன் ரூபாவாகும். அதில் பெரும்பகுதியை திருப்பிச் செலுத்த முடியாததால். அதனை அறவிட முடியாக் கடனாக தள்ளுபடி செய்ய வேண்டி ஏற்பட்டுள்ளது.

இந்தக் கடன் தொகையை நம் நாட்டில் விவசாயம் மற்றும் தொழில் துறைகளில் பயன்படுத்த முடிந்திருந்தால், அந்தத் துறைகளில் பெரும் வளர்ச்சியை எட்ட முடிந்திருக்கும். நாட்டில் நிதிக் கட்டுப்பாடு இல்லாததால்தான் இத்தகைய நிலை ஏற்பட்டது.

இங்கு வர்த்தகர்களும், நிதி நிறுவனங்களும் நெருக்கடியில் சிக்காத வகையில் செயல்பட வேண்டும். அதன்படி, பரேட்டா சட்டத்தால் ஏற்படும் நெருக்கடிகளைத் தவிர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்காக, நாடாளுமன்றத்தில் சில திருத்தங்களை முன்வைக்க எதிர்பார்க்கிறோம்.

சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கு தனியான கடன் திட்டத்தையும் அறிமுகப்படுத்த உள்ளோம். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் இதே கருத்தையே கொண்டுள்ளார்.

மேலும், எமக்கு நிதியுதவி வழங்கும் உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி போன்ற நிறுவனங்களுடன் கலந்தாலோசித்து இந்த குறைந்த வட்டியில் கடன் வழங்கும் முறையை அறிமுகப்படுத்த எதிர்பார்க்கிறோம். வங்கிகள் மூலம் மாத்திரம் கடன் வழங்கும் போது, கடன் பெறத் தகுதியுள்ளவர்களுக்கு கடன் வழங்கப்படுகிறதா என்ற பிரச்சினை எழுகிறது. எனவே, அமைச்சரவையுடன் கலந்துரையாடிய பின்னர், இந்த கடன் வசதியை வழங்கும்போது, கண்காணிப்பு முறைமையின் கீழ் முன்னெடுக்கப்பட வேண்டும் என்று முடிவு செய்தோம்.

மேலும் நிதியமைச்சுடன் இது தொடர்பில் கலந்துரையாடவும் நாம் எதிர்பார்க்கின்றோம்." – என்றார்.

# கந்தளாயில் கோர விபத்து! குடும்பஸ்தர் ஒருவர் சாவு!!








(கிண்ணியா நிருபர்)

திருகோணமலை, கந்தளாய் – சூரியபுர பகுதியில் வாகனங்கள் விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுப் பகல் இடம்பெற்றுள்ளது.

சூரியபுர பகுதியில் இருந்து கந்தளாய் நோக்கி வந்த மோட்டார் சைக்கிளும் கந்தளாயில் இருந்து சேருநுவர நோக்கிப் பயணித்த டிப்பர் வாகனமும் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது என்று சூரியபுர பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கந்தளாய் – ரஜஎல பகுதியைச் சேர்ந்த 60 வயதுடைய ஜி.ஜி.ஆரியபால என்ற மூன்று பிள்ளைகளின் தந்தையே விபத்தில் உயிரிழந்துள்ளார்.

இவர் தனது வயலில் வேலை செய்து விட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்தபோது சூரியபுர 11 மைல் போஸ்ட் அருகே விபத்துக்குள்ளாகியுள்ளார்.

டிப்பர் சாரதி கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சூரியபுர பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# வேலை நிறுத்தத்திற்கு தயாராகின்றனர் பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள்

பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் இன்று முதல் இரண்டு நாள் அடையாள வேலை நிறுத்தத்தில் ஈடுபட தயாராகி வருகின்றனர்.

சம்பளப் பிரச்சினையைச் சுட்டிக் காட்டி இந்த அடையாள வேலைநிறுத்தம் முன்னெடுக்கப்படவுள்ளது.

தற்போதைய பொருளாதார சூழ்நிலையில் சம்பளத்தை அதிகரிக்கக் கோரி பல்கலைக்கழக கல்வி மற்றும் கல்விசாரா ஊழியர்கள் அண்மைக் காலமாக பல்வேறு தொழிற்சங்க நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

எவ்வாறாயினும், அண்மையில் அரசாங்கம் பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களுக்கான கொடுப்பனவுகளை அதிகரிக்க நடவடிக்கை எடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.




# கல்விசாரா பணியாளரின் வேலைநிறுத்தத்துக்கு யாழ். பல்கலை மாணவர் ஒன்றியம் முழு ஆதரவு

## சிக்கல்களுக்கு உடனடித் தீர்வு காண வலியுறுத்தல்


பல்கலைக்கழக கல்விசாராப் பணியாளர்களின் சம்பள முரண்பாடு, சம்பள அதிகரிப்பு மற்றும் அவர்களைப் பாதிக்கும் சிக்கல்களிற்கு உரிய காலஅவகாசம் ஊழியர் சங்கங்களினால் வழங்கப்பட்டும் பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவும் அரசாங்கமும் இதுவரை தீர்வு வழங்காதமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து உடனடித் தீர்வை வழங்கவேண்டி நாடு தழுவிய ரீதியில் இன்றும் நாளையும் இடம்பெறும் வேலைநிறுத்தத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊழியர் சங்கமும் ஈடுபடவுள்ளது என சங்கத்தின் சார்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கு யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மாணவர் ஒன்றியமும் ஆதரவு தெரிவித்துள்ளது. இது தொடர்பில் மாணவர் ஒன்றியத்தின் ஊடக மற்றும் வெகுசன தொடர்புப் பிரிவு தெரிவித்தவை வருமாறு:-

எங்களின் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக ஊழியர் சங்கம் முன்னெடுக்கும் இருநாள் வேலைநிறுத்தத்திற்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் சமூகமாக நாம், எமது விரிவுரைகளைத் தவிர்த்து, எங்கள் மூத்தவர்களிற்கு தார்மீக மற்றும் முழுமையான ஆதரவையளிக்கின்றோம்.

நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடிச் சூழ்நிலையில் நாளாந்த வாழ்க்கைச் செலவுகளின் அதிகரிப்பால், அடித்தட்டு உழைக்கும் வர்க்கமும் முதற்கொண்டு அனைத்துத் தரப்பினரும் பாரிய நெருக்கடிகளையும் சவால்களையும் எதிர்நோக்கியுள்ள நிலையில் அவற்றை ஈடுசெய்வதற்கேற்ற சம்பள அதிகரிப்பு அத்தியாவசியமான ஒன்றாகும்.

மேலும், ஈஸ்டர் குண்டுத் தாக்குதல், கொரோனாத் தொற்று, பொருளாதார நெருக்கடி உள்ளிட்ட அவ்வப்போது ஏற்படும் அசாதாரண சூழ்நிலைகளினால் மாணவர்களின் கல்வியாண்டுகள் நிர்ணயித்தவற்றைவிட காலத்தால் அதிகரித்துள்ள நிலையில், மாணவர்களின் நலனைக் கருத்திற் கொண்டேனும், காலதாமதம் ஏதுமின்றி கல்விசார ஊழியர்களைப் பாதிக்கும் சம்பள முரண்பாடு, சம்பள அதிகரிப்பு உள்ளிட்ட நியாயமான சிக்கல்களிற்கு விரைந்து தீர்வுகான உரிய தரப்புக்கள் முன்வர வலியுறுத்துகின்றோம். - என்று உள்ளது.


யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்
JAFFNA UNIVERSITY STUDENTS' UNION

ஊடக வெளியீடு | Press Release

2024.02.2

**கல்விசார பணியாளர்களைப் பாதிக்கும் சிக்கல்களுக்கு உடனடித் தீர்வு கண்டு மாணவர்களின் கல்வியை உறுதி செய்க!**

பல்கலைக்கழக கல்விசாராப் பணியாளர்களின் சம்பள முரண்பாடு, சம்பள அதிகரிப்பு மற்றும் அவர்களைப் பாதிக்கும் சிக்கல்களிற்கு உரிய காலஅவகாசம் ஊழியர் சங்கங்களினால் வழங்கப்பட்டும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவும் சிறிலங்கா அரசாங்கமும் இதுவரை தீர்வு வழங்காதமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து உடனடித் தீர்வினை வழங்கவேண்டி நாடு தழுவிய இடம்பெறும் வேலைநிறுத்தத்தில் எமது யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊழியர் சங்கமும் எதிர்வரும் பெப்ரவரி 28 மற்றும் 29, 2024 ஆம் திகதிகளில் வேலைநிறுத்தத்தில் ஈடுபடவுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் சமூகமாக, எங்களின் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊழியர் சங்கம் முன்னெடுக்கும் இருநாள் வேலைநிறுத்தத்திற்கு மாணவர்கள் நாங்கள் எமது விரிவுரைகளினைத் தவிர்த்து எங்கள் மூத்தவர்களிற்கு தார்மீக மற்றும் முழுமையான ஆதரவுகளினையளிக்கின்றோம்.

நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடிச் சூழ்நிலையில் நாளாந்த வாழ்க்கைச் செலவுகளின் அதிகரிப்பால், அடித்தட்டு உழைக்கும் வர்க்கமும் முதற்கொண்டு அனைத்துத் தரப்பினரும் பாரிய நெருக்கடிகளையும் சவால்களையும் எதிர்நோக்கியுள்ள நிலையில் அவற்றினை ஈடுசெய்வதற்கேற்ற சம்பள அதிகரிப்பென்பது அத்தியாவசியமானதொன்றாகும்.

மேலும், ஈஸ்டர் குண்டுத் தாக்குதல், கொரோனாத் தொற்று, பொருளாதார நெருக்கடி உள்ளிட்ட அவ்வப்போது ஏற்படும் அசாதாரண சூழ்நிலைகளினால் மாணவர்களின் கல்வியாண்டுகள் நிர்ணயித்தவற்றைவிட காலத்தால் அதிகரித்துள்ள நிலையில், மாணவர்களின் நலனைக் கருத்திற் கொண்டேனும், காலதாமதம் ஏதுமின்றி கல்விசார ஊழியர்களைப் பாதிக்கும் சம்பள முரண்பாடு, சம்பள அதிகரிப்பு உள்ளிட்ட நியாயமான சிக்கல்களிற்கு விரைந்து தீர்வுகான உரிய தரப்புக்கள் முன்வர வலியுறுத்துகின்றோம்.

நன்றி





# மஹியங்கனை பௌத்த பிக்கு தலைமையில் மூவினத்தவருக்கும் உலர் உணவுப் பொதிகள்

## வவுனியாவில் நேற்று வழங்கி வைப்பு

(கே.வசந்தன்)

மஹியங்கனை பௌத்த பிக்கு தலைமையில் வவுனியாவில் மூவினங்களையும் சேர்ந்த 250 பேருக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

இந்து - பௌத்த சங்கத்தின் ஏற்பாட்டில் வவுனியா, சுத்தானந்தா இந்து இளைஞர் சங்க மண்டபத்தில் இந்நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

கடந்த காலங்களில் சமய நல்லிணக்கம் சீர்குன்றிக் காணப்பட்டது. சமய நல்லிணக்கம் வடக்கையும், தெற்கையும் இணைக்கும் உறவுப் பாலமாகவுள்ளது. அந்தவகையில், இந்து- பௌத்த சமயத் தலைவர்களின் ஒற்றுமையுடன் இந்த நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது.

மஹியங்கனை பௌத்த பிக்கு தலைமையில் சங்க நாயக்க தேரர்கள் வருகை தந்தமையுடன், மூவின மக்களுக்கும் ஆசி வழங்கி உலர் உணவுப் பொதிகளை வழங்கி வைத்தனர்.

இந்து பௌத்த சங்கத்தின் தலைவர் ம.மயூரதன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பௌத்த குருமார், இந்து குருமார், மௌலவிகள், கிறிஸ்தவ மதகுருமார், வவுனியா பிரதி பொலிஸ்மா அதிபர், முப்படையைச் சேர்ந்த வவுனியா மாவட்ட உயர் அதிகாரிகள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.























# அரசமைப்பு பேரவையின் அனுமதியுடனேயே பொலிஸ் மா அதிபர் நியமிக்கப்பட்டுள்ளார்

## சட்டமா அதிபர் தரப்பு உயர் நீதிமன்றத்தில் அறிவிப்பு

தேசபந்து தென்னகோனை பொலிஸ்மா அதிபர் பதவிக்கு நியமிப்பதற்கு சபாநாயகர் தலைமையிலான அரசமைப்பு பேரவையின் பெரும்பான்மை உறுப்பினர்கள் அனுமதி வழங்கியுள்ளனர் என சட்டமா அதிபர் உயர் நீதிமன்றத்தில் நேற்று அறிவித்தார்.

தேசபந்து தென்னகோன் பொலிஸ்மா அதிபர் பதவிக்கு நியமிக்கப்படுவதை தடுப்பதற்கான உத்தரவை பிறப்பிக்குமாறு கோரி தாக்கல் செய்யப்பட்டிருந்த ஏழு மனுக்கள் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே சட்டமா அதிபர் சார்பில் ஆஜரான மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் நெரின் புள்ளே இதனைக் கூறினார்.

தேசபந்து தென்னகோன் பதில் பொலிஸ்மா அதிபராக செயற்படுவதையும் அவர் பொலிஸ்மா அதிபர் பதவிக்கு நியமிக்கப்படுவதையும் தடுப்பதற்கான உத்தரவை பிறப்பிக்குமாறு கோரி கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் முஜீபுர் ரஹ்மான் உள்ளிட்ட ஏழு தரப்பினர் மனுக்களைத் தாக்கல் செய்திருந்தனர்.

உயர் நீதிமன்ற நீதியரசர்களான பிரீத்தி பத்மன் சூரசேன, அச்சல வெங்கப்புலி, மஹிந்த சமயவர்தன ஆகியோர் அடங்கிய நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் மனுக்கள் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.



தேசபந்து தென்னகோன் ஏற்கனவே பொலிஸ்மா அதிபர் பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளமையால், மனுக்களைத் தொடர்ந்தும் விசாரணைக்கு எடுத்துக்கொள்வது அநாவசியமானது என மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் நெரின் புள்ளே, ஜனாதிபதி சட்டத்தரணி ரொமேஷ் டி சில்வா ஆகியோர் சுட்டிக்காட்டினர்.

தேசபந்து தென்னகோன் பதில் பொலிஸ்மா அதிபராக செயற்படுவதை தடுக்குமாறு மனுக்களில் கோரப்பட்டுள்ள போதிலும், அவர் தற்போது பொலிஸ்மா அதிபர் பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார் என அவர்கள் தெரிவித்தனர்.

இதன்போது, மனுதாரர்கள் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணிகளான சாலிய பீரிஸ், ஜெஃப்ரி அழகரட்ணம் ஆகியோர் நீதிமன்றத்தில் விடயங்களைத் தெளிவுபடுத்தினர்.

மேற்படி தரப்பினர் நீதிமன்றத்தில் அடிப்படை ஆட்சேபனைகளையும் எதிர்ப்பு ஆட்சேபனைகளையும் தாக்கல் செய்துள்ளனர் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

# அரசியல் சிந்தனைகளை மேம்படுத்துவது தற்போதைய சூழ்நிலையில் கடினமானது

## முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் உத்திக பிரேமரத்ன தெரிவிப்பு



"மக்களின் எதிர்பார்ப்பு தோற்கடிக்கப்பட்டுள்ள நிலையில் நாடாளுமன்ற உறுப்பினராக தொடர்ந்து செயலாற்றுவது இளம் தலைவருக்கு அழகல்ல. எனது அரசியல் சிந்தனைகளை மேம்படுத்திக் கொள்வதற்கு தற்போதைய சூழ்நிலை கடினமானதாக அமையும்."

– இவ்வாறு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் உத்திக பிரேமரத்ன தெரிவித்தார்.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவிடம் நேற்று அவர் தனது பதவி விலகல் கடிதத்தை கையளித்துள்ளார். அந்த கடிதத்தில் அவர் மேலும் குறிப்பிடுகையில் –

"2020ஆம் ஆண்டு இடம்பெற்ற பொதுத்தேர்தலில் அநுராதபுரம் தேர்தல் தொகுதியில் போட்டியிட்டு நாடாளுமன்றத்துக்கு தெரிவாகிய நான் அப்போதைய அரசாங்கம் நாட்டில் சிறந்த மாற்றத்தை ஏற்படுத்தும் என்ற எதிர்பார்ப்பில் அரசாங்கத்துக்கும், அரச நடவடிக்கைகளுக்கும் ஒத்துழைப்பு வழங்கினேன்.

இருப்பினும் சகல தரப்பினரது எதிர்பார்ப்புக்கள் முழுமையாக இல்லாதொழியும் வகையில் கடந்த காலங்களில் பல சம்பவங்கள் இடம்பெற்றன.

இவ்வாறான பின்னணியில் நாடாளுமன்ற உறுப்பினராக அரச இயந்திரத்தில் ஒன்றிணைவதும், அரச செயற்பாடுகளில் நேரடியாக ஈடுபடுவதும் இளம் தலைவருக்கு பொருத்தமற்றது.

இவ்வாறான நிலையில் எனது அரசியல் சிந்தனைகளை மேம்படுத்திக் கொள்வது கடினமானதாக அமையும்.

இதனால் தற்காலிகமாக இந்த அரச இயந்திரத்தில் இருந்து விலக தீர்மானித்துள்ளேன். மேற்குறிப்பிட்ட காரணத்தை மேற்கோள்காட்டி நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்கிறேன்." – என்று குறிப்பிட்டுள்ளார்.

# செப்டெம்பர் அல்லது ஒக்டோபரில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும்

## தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் அறிவிப்பு

ஜனாதிபதித் தேர்தல் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 18ஆம் திகதி மற்றும் ஒக்டோபர் மாதம் 18ஆம் திகதிக்கு இடைப்பட்ட காலப்பகுதியினுள் நடைபெறும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தேர்தல் செலவுகளை ஒழுங்குபடுத்தும் சட்டம் தொடர்பில் அரசியல் கட்சிகளுக்கு தெளிவுபடுத்தும் நிகழ்வில் கலந்துகொண்டதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அதன் தலைவர் சமன் ஸ்ரீரத்நாயக்க இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

தேர்தல் செலவுகளை ஒழுங்குபடுத்தும் சட்டம் குறித்து தெளிவுபடுத்துவதற்காக 40 அரசியல் கட்சிகள் தேர்தல் ஆணைக்குழுவுக்கு நேற்று அழைக்கப்பட்டிருந்தன. அதற்கமைய பல அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் அதில் கலந்துகொண்டனர்.

அதனைத் தொடர்ந்து ஊடகங்களுக்குக் கருத்துரைத்த தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் சமன் ஸ்ரீரத்நாயக்க, தேர்தல்களை நடத்துவதற்கு நிதி



சம்பந்தமாக காணப்பட்ட பிரச்சினை தற்போது இல்லாமல் போயுள்ளது என்று தெரிவித்தார்.

## இரகசியம் பரகசியம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

திருகோணமலை ஆயர் முன்னிலையில் இரண்டொரு தினங்களுக்கு முன்னர் நடந்தமை குறித்து என் பத்தியில் பிரஸ்தாபித்திருந்தேன். திருகோணமலையில் வழக்குத் தொடர்ந்த உறுப்பினரை அழைத்து, திருகோணமலை ஆயர், திருகோணமலை பொறியியலாளர் தவசிலிங்கம், வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன், முன்னாள் மட்டக்களப்பு மேயர் சரவணபவன், கட்சியின் இதுவரை காலத்துக்குமான பதில் பொதுச் செயலாளராக இருந்த மருத்துவர் சத்தியலிங்கம் ஆகியோர் கலந்துரையாடியிருந்தனர்.

பூர்வாங்க இணக்கத்திற்கான சூழ்நிலை காணப்பட்ட போதிலும், சர்ச்சையில் சம்பந்தப்பட்ட பிரதான தரப்புகள் அந்தச் சந்திப்பில் நேரடியாகப் பங்குபற்றாத நிலையில் அந்த முயற்சியில் குறிப்பிடத்தக்க முன்நகர்வு இருக்கவில்லை. விடயம் தேங்கி நின்றது.

இந்தப் பின்புலத்தில் நேற்று யாழ்ப்பாணத்தில் ஒரு காத்திரமான முயற்சி எடுக்கப்பட்டது. பெரும்பாலும் ஒரே அமுக்கில் பிரச்சினையைத் தீர்த்து விடலாம் – இணக்கத்தை ஏற்படுத்தி, விடயத்தை இனி சுமூகமாக முன் நகர்த்தலாம் – என்ற நம்பிக்கை இந்த யாழ் முயற்சியில் முழுமையாக இருந்த போதிலும், காலன் வந்து கடைசி நேரத்தில் குழப்பிவிட்டான்.அதனால்தான் சாண் ஏற முழம் சறுக்கியது என்றேன்.

நேற்றைய யாழ் முயற்சிக்கு பிள்ளையார் சுழி போட்டவர் ஊடகவியலாளர் cum ஊடக முதலாளி.

யாழ் மதத் தரப்புகளை – தலைவர்களை – பார்த்து இந்தப் பிரச்சினையை இப்படியே நீடிக்கப் பார்த்திருக்கப் போகின்றீர்களா என அவர் உரிமையுடன் கடிந்து கொண்டமையால் இந்த முயற்சி ஆரம்பிக்கப்பட்டது என்பதை உறுதியாக என்னால் அறிந்து கொள்ள முடிந்தது.

தமிழரசின் இப்போதைய சர்ச்சை நிலைமையை பொறுத்தவரை அந்த ஊடகவியலாளர் cum ஊடக முதலாளி 'பாட்டும் நானே; பாவமும் நானே' என்ற காரண காரிய கர்த்தா என்பது வேறு விடயம்.

ஆனால் அவர் கொடுத்த சூட்டில்தான் நேற்றைய சமரச சந்திப்புக்கு ஏற்பாடு முன்னெடுக்கப்பட்டு இணக்கம் காணப்பட்டது.

நேற்று இரவு எட்டு முப்பது மணிக்கு நல்லை ஆதீனத்தில் சந்திப்பு என்பது ஏற்பாடு. நல்லைக் குரு மகா சந்நிதானம், யாழ் ஆயர், செஞ்சொற்செல்வன் ஆறு. திருமுருகன் ஆகிய மூவரோடு சிறீதரன் எம்.பியும்சுமந்திரன் எம்.பியும்நேரடியாகச் சந்திப்பது என்று இணக்கம். ஐவரும் சந்திப்புக்கு உடன்பட்டிருந்தனர். இன்று காலைப் பத்திரிகைக்கு இணக்கம் பற்றிய தலைப்புச் செய்தி போடலாம் என்று நானும் காத்திருந்தேன்.

ஆனால் இடையில் காலன் புகுந்து விளையாடி விட்டான். தெஹிவளையில் சுமந்திரனின் தாயார் நேற்று பிற்பகல் திடீரென உலகை விட்டுப் பிரிய, உடன் கொழும்பு விரைய வேண்டியவரானார் சுமந்திரன். நேற்றிரவு நடக்க வேண்டிய சந்திப்பு பிற்போட வேண்டியதாயிற்று. சந்திப்பு நடந்திருந்தால் நல்லை ஆதீனம், யாழ் ஆயர், ஆறு.திருமுருகன் ஆகியோர் பக்கத்தில் நிற்க, சுமந்திரனும் சிறீதரனும் கை கொடுத்து ஊடக அறிவிப்பு வெளியிட்டிருப்பர் என்று நான் எதிர்பார்த்துக் காத்திருந்தேன். ஆனால், சாண் ஏற, முழம் சறுக்கி விட்டது.

நாளை திருகோணமலையிலும், யாழ்ப்பாணத்திலும் வழக்குத் தவணை. சம்பந்தப்பட்ட தரப்புகள் இடையே இணக்கமாக விடயத்தைத் தீர்க்கக்கூடிய மனப்பதிவு – மனப்படிவு – நிலவுகின்றமையால் நாளைய வழக்குத் தவணையில் எதிரெதிர் தரப்புக்கள் ஆக்ரோஷமாக மோதும் சூழல் காணப்படாது என்றும், தரப்புக்கள் தவணைக்காகத் திகதி கேட்டு, விடயத்தை ஒத்திப் போடும் முயற்சியில் ஈடுபடலாம் என்றும் எதிர்பார்க்க முடியும்.

ஆயினும், வழக்குகளின் எதிராளிகள் தரப்பின் சட்டத்தரணிகள் கட்சிக்கும், நிர்வாகிகளுக்கும் விதித்த இடைக்காலத் தடையை நீக்கும்படி கோரி பூர்வாங்க வாதத்தை நாளை முன்வக்க முயலலாம். அதைத் தவிர்க்கும்படி கோரவோ, தவறு என்று கூறவோ முடியாது.

சமரச இணக்க முயற்சியில் மட்டுமல்ல, வழக்கு விடயத்திலும் விவகாரம் சாண் ஏற முழம் சறுக்கும் நிலைமை உண்டு. பெரும்பாலும் அது குறித்து நாளை வழக்குத் தவணைக்கு முன்னர் விவரம் தருவேன். அதுவரைப் பொறுத்தருள்க.

\+ + +

உயர்நீதிமன்றத்தின் நீதியரசர்கள் முக்கிய வழக்குகளை எட்டுப் பத்து நாள்களாக விசாரணை செய்துவிட்டு, காரணமே கூறாமல், விளக்கம் குறிப்பிடாமல், மனு விசாரணைக்கு ஏற்கப்படாமல் நிராகரிக்கப்படுகின்றது என்று ஒற்றை வரியில் தீர்ப்பளிப்பது போன்ற விடயங்களை அண்மைக் காலத்தில் என் பத்தியில் பெரும் குறையாகச் சுட்டி காட்டி வருகிறேன்.

அந்த வரிசையில், ஒரு வழக்கை விசாரித்து முடித்து ஒன்றரை வருட காலத்தின் பின்னரும் தீர்ப்பை வெளியிடவில்லை, இப்போது விசாரித்த பல வழக்குகளில் தீர்ப்பை – முடிவை – வெளியிடாமல் நீதியரசர் ஓய்வு பெற்றுச் சென்றால், அத்தகைய வழக்குகளை மீளவும் ஆரம்பத்தில் இருந்து விசாரிக்கும் கட்டாயம் ஏற்படும் என்பவை பற்றியெல்லாம் நேற்று என் பத்தியில் பிரஸ்தாபித்திருந்தேன். வாசகர்களுக்கு நினைவிருக்கலாம்.

நேற்று இரவு 10:50 மணி அளவில் நமது ஆசிரிய பீட செய்தி மின்னஞ்சலுக்கு ஒரு கடிதம் வந்தது. அதை வரைந்த அன்பர் நிச்சயம் ஒரு சட்டத்தரணியாக இருப்பார் என்று நினைக்கிறேன். அவரின் பெயர் எனக்கு மிகவும் அறிமுகமானது போல இருந்தாலும், அந்த மின்னஞ்சலைத் திறந்து வாசித்த போது அவரை என்னால் நினைவுபடுத்திக் கொள்ள முடியவில்லை.

அவர் அனுப்பிய செய்தி மிக உரிமையுடன் பின்வருமாறு இருந்தது:–

இன்று நீங்கள் எழுதியுள்ள 'இரகசியம் பரகசியம்' பத்தி கௌரவ நீதிமன்றின் மாண்பையும் அதன் மீது மக்கள் கொண்டுள்ள மரியாதையையும் மலினப்படுத்தும் வகையில் காணப்படுவதால் உங்களை ஏன் 2024 CONTEMPT OF A COURT, TRIBUNAL OR INSTITUTION ACT, No. 8 OF 2024 சட்டத்தின் கீழ் தண்டிக்க கூடாது என்பதற்கு ஏதாவது காரணம் இருந்தால் நாளைய பத்திரிகையில் வெளியிடுமாறு தேவைப்படுத்தப்படுகிறார்கள்.

உங்களின் உசாத் துணைக்காக குறித்த சட்டத்தின் பிரதி இணைக்கப்பட்டுள்ளது.

இங்ஙனம்,
உங்கள் வாசகர்களில் ஒருவன்.

– மிக கௌரவமாக, மதிப்பாக அதே நேரம் சட்டக்கடப்பாட்டை உணர்த்தும் விதத்தில், அவரது அஞ்சல் அமைந்திருந்தது. அதை வாசித்த கையோடு, ஒரு ஐந்து – பத்து நிமிடத்தில், என் பதிலை அனுப்பி வைத்தேன். அது பின்வருமாறு அமைந்தது:–

முதலில் நன்றி.

உங்களை யார் என்று எனக்குத் தெரியவில்லை.

எனினும் தாராளமாக முயற்சியுங்கள்.

இல்லாவிட்டால் சம்பந்தப்பட்டோரை முயற்சிக்கச் சொல்லுங்கள்.

யாராவது பூனைக்கு மணிகட்டியாக வேண்டும்.

கலகம் பிறந்தால்தான் நியாயம் பிறக்கும்.

ஒரு தடவை விக்டர் ஐவனின் 'Unfinished Struggle - For the Independence of the Judiciary' புத்தகத்தை வாசியுங்கள். அதைத் தொடர வேண்டிய தேவையுள்ளது.

நீதித் துறையில் நீதி நிலைநாட்டப்பட வேண்டும். சிறப்புரிமைகளுக்குப் பின்னால் பதுங்கி, நீதி தவறி, தவறிழைத்துக் கொண்டிருப்பதைப் பார்த்துக் கொண்டிருக்கத் தேவையில்லை. பொறுப்புக் கூறல் கடப்பாடு எல்லோருக்கும் உண்டு. எனக்கும்தான்.

இவ்விடயத்தை யாராவது கவனித்துத் தீர்வு பெற்றுத் தரமாட்டார்களா என்று பார்த்திருக்கிறேன்.

நான் எழுதியவை நீங்கள் குறிப்பிட்டபடி 'கௌரவ நீதிமன்றின் மாண்பையும் அதன் மீது மக்கள் கொண்டுள்ள மரியாதையையும் மலினப்படுத்தும் வகையில் காணப்படுகின்றதா' என்பதைக் கவனிக்க வேண்டிய பொறுப்பு நீதிமன்றத்தினுடையது.

தயவு செய்து அதைச் செய்யச் சொல்லுங்கள். விசாரித்தால் பல விடயங்களை வெளியே கொண்டு வரலாம்.

சட்டம் எனக்கும் தெரியும்.

அன்புரிமையுடன்.

– இவ்வாறு பதிலை நான் அனுப்பிய ஐந்தாறுநிமிடங்களில்அவரிடமிருந்துமீளவும் பதில் வந்தது. அது பின்வருமாறு:–

சுடச்சுட பதிலனுப்பியமைக்கு நன்றி. மனதில் பட்டதை எழுதினேன். இவ்வளவு துணிச்சலான பதில் வரும் என எதிர்பாக்கவில்லை.

– இப்படி தெரிவித்து இருந்தார் அந்த நண்பர். என் எழுத்திலும் எங்கள் பத்திரிகையிலும்அவ்வளவு சிரத்தையாக – அவதானிப்பாக – இருக்கும் அன்பர்களின் இத்தகைய பிரதிபலிப்புகள்தான் எங்களை எழுதத் தூண்டும் டொனிக். அவர் போன்ற உரிமையுடன் கூடிய அன்பு உள்ளங்களுக்கு நன்றி. சிரம் தாழ்த்திய வணக்கம்.

## தெற்கு அதிவேக வீதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நோக்கி நீர் கொண்டு சென்ற லொறி மோதி இருவரும் உயிரிழந்துள்ளனர்.

## முன்னாள் நிதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நிதி அமைச்சர் பதவியை வகித்த காலத்தில் அவர் 11 வரவு – செலவுத் திட்டங்களைச் சமர்ப்பித்து சாதனை படைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஈழத்தமிழர்களுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மதுரை மீனாட்சி அம்மன் ஆலயத்துக்கு இந்தியப் பிரதமர் நேற்று வந்த வேளை மதுரை ஆதீனத்தின் பீடாதிபதியை வழியில் சந்தித்து தனது வாகனத் தொடரணியை நிறுத்திப் பேசினார்.

இவ்வாறு இடம்பெற்ற பேச்சு தொடர்பில் மதுரை ஆதீனத்தின் பீடாதிபதி ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"கச்சதீவு இலங்கை வசமிருப்பதால் இந்திய மீனவர்கள் கஷ்டப்படுகின்றார்கள். எனவே, இந்தியாவில் காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் இலங்கைக்கு வழங்கிய கச்சதீவை மீட்க வேண்டும்.

இலங்கைத் தமிழர் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும். அங்கு தமிழர் பகுதியை தனி நாடாக மாற்ற வேண்டும்.

இப்படி இந்தியப் பிரதமரிடம் நேரில் கோரிக்கை விடுத்தேன்.

இவற்றைக் கேட்ட பிரதமர் அவற்றைச் செய்வதாகக் கூறியுள்ளார்." – என்றார்.





# பாதையோர அங்காடி கடைகளை அகற்றும் பணி சம்மாந்துறையில்!

(எஸ்.என்.தில்சாத் பர்வீஸ்)

சம்மாந்துறை பிரதேச சபையின் ஆளுகைக்கு உட்பட்ட பிரதேசங்களில் பாதசாரிகளுக்க பல்வேறு வழிகளிலும் இடையூறை ஏற்படுத்தி வருகின்ற பாதையோர அங்காடி வியாபாரிகளை அகற்றும் பணிய்சி சம்மாந்துறை பிரதேச சபை நேற்று முதல் மேற்கொண்டு வருகின்றது.

சம்மாந்துறை பிரதேச மக்களின் கோரிக்கைக்கு அமைவாக சம்மாந்துறை நகரத்திலிருந்து அம்பாறை வீதி, மல்கம்பிட்டி வீதி, பொலீஸ் வீதி மற்றும் கல்முனை வீதி முதிலியவற்றின் இரு மருங்குகளிலும் தற்காலிக வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுவோர்களினால் பாதசாரிகள் மட்டுமல்லாது போக்குவரத்தில் ஈடுபடுகின்றபல்வேறு வகையான வாகனங்களுக்கும் பெரும் அசௌகரியங்கள் ஏற்பட்டு வருகின்றன. அத்துடன் இதனால் வீதி விபத்துகளும் நேருகின்றன.

இவ்வாறான ஆபத்துக்களில் இருந்து மக்களை பாதுகாக்கும் நோக்குடன் சம்மாந்துறை பிரதேச சபையின் செயலாளர் எம்.ஏ.கே முஹம்மட் தலைமையில் கல்முனை வீதி அபிவிருத்தித் திணைக்கள உத்தியோகத்தர்கள், பொலீஸார், பொது சுகாதார பரிசோதகர்கள், பிரதேச சபை உத்தியோகத்தர்கள், வர்த்தக சங்கத்தினர் உள்ளிட்ட ஒன்றிணைந்த குழுவினர் இனங்காணப்பட்ட தற்காலிக அங்காடி வியாபாரிகளை அகற்றும் பணியை மேற்கொண்டு வருகின்றனர்.











# பொது சுகாதாரப் பரிசோதகர் கொலை நான்கு பொலிஸ் குழுக்கள் விசாரணை



காலி – கரந்தெனிய சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிற்குட்பட்ட பிரதான பொது சுகாதார பரிசோதகர் ரோஷன் குமார கொலை செய்யப்பட்டமைக்கான காரணத்தைக் கண்டறிவதற்காக நான்கு பொலிஸ் குழுக்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன என பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோன் தெரிவித்துள்ளார்.

கொலை தொடர்பில் சில தகவல்கள் வெளிக்கொணரப்பட்டுள்ளன எனவும் பொலிஸ் மா அதிபர் தெரிவித்துள்ளார்.

கொலை செய்யப்பட்ட கரந்தெனிய சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிற்குட்பட்ட பிரதான பொது சுகாதார பரிசோதகரும் அகில இலங்கை பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் பொருளாளருமான ரோஷன் குமாரவின் உடல் அவரது வீட்டிற்கு நேற்று கொண்டு செல்லப்பட்டது.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ், பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோன் ஆகியோர் அவரது உடலுக்கு இறுதி அஞ்சலி செலுத்தினர். இதன்போது குடும்பத்தவர்களுக்கு ஆறுதல் தெரிவித்தனர்.

மோட்டார் சைக்கிளில் வருகை தந்த இருவர் பொது சுகாதார பரிசோதகர் மீது நேற்று முன்தினம் காலை 7.30 மணிக்கு துப்பாக்கிச்சூடு நடத்தி விட்டுத் தப்பிச் சென்றனர்.

உயிரிழந்த 51 வயதான பிரதான பொது சுகாதார பரிசோதகர் ரோஷன் குமார இரண்டு பிள்ளைகளின் தந்தையாவார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## சபாநாயகருக்கு வந்த சோதனை

நாடாளுமன்ற மாண்புகளையும், ஜனநாயக விழுமியங்களையும், உயர் பதவிகளுக்கான கௌரவ அந்தஸ்தையும் தமது மோசமான நடவடிக்கைகள் மூலம் சீரழித்திருக்கும் சபாநாயகர் தாம் தலைமை தாங்கும் நாடாளுமன்றத்திலேயே தமக்கு எதிரான - மோசமான - விமர்சனங்களை எதிர்கொண்டு நெருக்கடிக்கு ஆளாகப் போகின்றார் என்பது பெரும்பாலும் உறுதியாகி வருகின்றது.

தமது பதவி நிலைக்குரிய அந்தஸ்து, கௌரவம், உயர் பண்புகள் போன்றவற்றை அவர் உதாசீனப்படுத்தி, சிறுமைத்தனமாக நடந்து கொண்டுள்ளார் என்ற குற்றச்சாட்டு அவர் மீது சுமத்தப்பட்டு, அது தொடர்பில் அவருக்கு எதிராகக் காட்டமான உரைகள் நாடாளுமன்றத்தில் இடம்பெறும் சூழல் தோன்றியுள்ளது.

அவருக்கு எதிராக எதிர்க்கட்சிகள் முன்வைக்க போகும் நம்பிக்கையில்லாப் பிரேரணையில் அவர் மீது சுமத்தப்பட போகும் குற்றச்சாட்டுக்கள், வசைமாரிகள் போன்றவற்றை அவர் அல்லது அவரை ஆதரித்து நிற்கும் அரசுத் தரப்பினர் எப்படி எதிர்கொண்டு சமாளிக்க போகின்றனர் என்பதுதான் இப்போது அவரின் தரப்புக்குள்ள நெருக்கடி ஆகும்.

நாடாளுமன்றத்தில் ஆளும் தரப்புக்கு அறுதிப் பெரும்பான்மை உள்ளது. சபாநாயகரை இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையைத் தோற்கடித்துக் காப்பாற்றுவோம் என்று ஆளும் கட்சியின் - மொட்டுக் கட்சியின் - தலைவரான முன்னாள் ஜனாதிபதியும் தற்போதைய எம்.பியுமான மஹிந்த ராஜபக்ஷ கூறியிருக்கின்றார்.

அவர் கூறியபடி நம்பிக்கையில்லாப் பிரேரணையைத் தோற்கடித்து, பதவியில் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன நீடிப்பார் என்பது பெரும்பாலும் உறுதி.

ஆனால், இந்தப் பிரேரணையை ஒட்டி சபையில் - நாடாளுமன்றத்தில் - எதிர்க்கட்சிகள் கொளுத்திப் போடப் போகின்ற அரசியல் சரவெடிகளை சபாநாயகரும் அவரைப் பாதுகாக்க முனையும் ஆளும் தரப்பினரும் எப்படிச் சமாளிக்கப் போகின்றார்கள் என்பதுதான் கேள்வி.

நிகழ்நிலைக் காப்புச் சட்டம் தொடர்பில் உயர்நீதிமன்றம் வழங்கிய பரிந்துரைகளை உதாசீனப்படுத்தி, அவற்றை நிராகரித்து, அந்தச் சட்டமூலம் நிறைவேறியதாக அறிவித்தமை மூலம் அரசமைப்பையும் உயர்நீதிமன்றத்தையும் கீழ்மைப்படுத்தி இருக்கின்றார் சபாநாயகர்.

அரசமைப்பு கவுன்ஸில் கூட்டத்தில் வாக்களித்த கவுன்ஸிலின் உறுப்பினர்களின் எண்ணிக்கை மற்றும் கவுன்ஸிலின் விதிமுறைகளை தம்மிஷ்டப்படி - வெளிப்படையாகவே தவறாக - வியாக்கியானம் செய்து, பிழையாக அர்த்தப்படுத்தி, அதன் மூலமும் அரசமைப்பையும் ஜனநாயகத்தையும் கேவலப்படுத்தி இருக்கின்றார் அவர்.

அது மட்டுமல்ல, ஒருவரைக் கைது செய்து, அரசமைப்பு வழங்கிய அடிப்படை உரிமைகளை மீறும் விதத்தில் அந்தக் கைதியைச் சித்திரவதை செய்த குற்றத்தை இழைத்தார் என உயர் நீதிமன்றத்தினால் அண்மையில் அடையாளம் காணப்பட்டு, அதற்காக அபராதத் தண்டனை விதிக்கப்பட்ட அதிகாரியை பொலிஸ்மா அதிபராக நியமிக்கும் நடவடிக்கைக்காகவே இப்படி அரசமைப்பு கவுன்ஸில் தீர்மானத்தை முறையற்ற விதத்தில் அர்த்தப்படுத்திச் செயற்பட்டிருக்கின்றார் சபாநாயகர்.

இவையெல்லாம் சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை நாடாளுமன்றுக்கு வரும்போது அங்கு பிய்த்து உதறப்படும் என்பது நிச்சயம்.

உத்தேச நம்பிக்கையில்லாப் பிரேரணை விவாதங்களில் இப்போது அரசு தரப்பில் இருக்கும் எல்லோரும் சபாநாயகரை ஆதரித்து நிற்பார்கள் என்பதும் உறுதி அல்ல.

தற்போது ஆஸ்திரேலியா சென்றிருக்கும் சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த - மொட்டுத் தரப்பு எம்.பியான - தயா ஜயசேகரா தாம் நம்பிக்கையில்லாப் பிரேரணை விவாதத்தின் போது சபாநாயகருக்குஎதிராக-பிரேரணையைஆதரித்து - வாக்களிப்பார் என அறிவித்திருக்கின்றார்.

"பல விடயங்களில் சபாநாயகர் பக்கச்சார்பாக நடந்திருக்கின்றார். அவரின் உண்மை முகத்தை அம்பலப்படுத்த வேண்டிய வேளை வந்துள்ளது. அதனை நான் நம்பிக்கையில்லாப் பிரேரணை சமயத்தில் கனகச்சிதமாகச் செய்வேன்" - என்று தயா ஜயசேகரா கூறியிருக்கின்றார்.

ஆக, நம்பிக்கையில்லாப் பிரேரணை விடயத்தில் சபாநாயகரின் தலை தப்பும். ஆனால் அவர் கௌரவம் சீரழியும். அது தவிர்க்க முடியாத நிலைமை.




# தமிழக மீனவர்களை விடுவிக்கக் கோரி பாம்பனில் மனித சங்கிலிப் போராட்டம்

இலங்கையில் சிறைப்பிடிக்கப்பட்ட இந்திய மீனவர்களை விடுதலை செய்யுமாறு கோரி பாம்பன் பகுதியில் மனித சங்கிலிப் போராட்டம் நேற்று முன்னெடுக்கப்பட்டது.

பிரதமர் மோடி தமிழகத்திற்கு விஜயம் மேற்கொண்டுள்ள நிலையில், அவருக்கு எதிர்ப்பு தெரிவித்து கறுப்புக்கொடி போராட்டம் நடத்தவுள்ளோம் என மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

இலங்கை அரசின் நடவடிக்கையினை தடுக்க மறுக்கும் இந்திய மத்திய அரசினை கண்டிப்பதாக தெரிவித்து, பாம்பன் பகுதியில் மனித சங்கிலிப் போராட்டம் நேற்று இடம்பெற்றது.

அகில இந்திய மீனவர் காங்கிரஸ் ஏற்பாடு செய்த மனித சங்கிலிப் போராட்டம் தமிழகத்தின் இராமேஸ்வரம் – பாம்பனில் நேற்று இடம்பெற்றது.

தமிழக மீனவர்களுக்கு விதிக்கப்பட்ட சிறைத் தண்டனைக்கு ஆட்சேபனை தெரிவித்து இராமேஸ்வரம் மீனவர்கள் சுமார் ஒரு வாரத்திற்கு மேலாக தொடர் போராட்டங்களை முன்னெடுத்து வந்தனர். உண்ணாவிரதப் போராட்டத்திலும் ஈடுபட்டிருந்தனர்.




# ககன்யான் திட்டத்தில் விண்வெளி செல்லவுள்ள 4 வீரர்களை அறிமுகப்படுத்தினார் பிரதமர் மோடி

மனிதர்களை விண்வெளிக்கு அனுப்பும் ககன்யான் திட்டத்தின் மூலம் விண்வெளி செல்லும் 4 வீரர்களை பிரதமர் மோடி அறிமுகப்படுத்தினார்.

கேரள மாநிலம் திருவனந்தபுரத்தில் உள்ள விக்ரம் சாராபாய் விண்வெளி மையத்துக்கு நேற்று சென்றிருந்த பிரதமர் மோடி, ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் விண்வெளி மையத்தில் பி.எஸ்.எல்.வி. ஒருங்கிணைப்பு வசதி உள்ளிட்ட விண்வெளி உள்கட்டமைப்பு திட்டங்களைத் தொடங்கி வைத்தார். அப்போது, மனிதர்களை விண்வெளிக்கு அனுப்பும் ககன்யான் திட்டத்தின் மூலம் விண்வெளி செல்லும் 4 வீரர்களை பிரதமர் மோடி அறிமுகப்படுத்தினார்.

அதன்படி, குரூப் கேப்டன்கள் பிரசாந்த் பாலகிருஷ்ணன் நாயர், அஜித் கிருஷ்ணன், அங்கத் பிரதாப் மற்றும் விங் கமாண்டர் சுபான்ஷ"சுக்லா ஆகியோர் ககன்யான் திட்டத்தின் மூலம் விண்வெளி செல்ல உள்ளனர். இவர்கள் கடந்த ஆறு மாதங்களாக விண்வெளி செல்வதற்கான பயிற்சியில் ஈடுபட்டு வந்தனர். இந்தநிலையில் நேற்றைய விழாவில் இந்த நால்வருக்கும் மிஷன் லோகோவை பிரதமர் மோடி வழங்கினார்.




# தமிழகத்தில் கொள்ளை அடிக்க இண்டியா கூட்டணி முயற்சிக்கிறது

## பிரதமர் மோடி தெரிவிப்பு

“டில்லியில் எல்லாம் இண்டியா கூட்டணி வெற்றி பெறாது என்பது தெரிந்துவிட்டது. ஆனால், தமிழகத்தில் மட்டும் எப்படியாவது கொள்ளை அடிக்க வேண்டும் என்பதற்காக அந்தக் கூட்டணி முயற்சித்துக் கொண்டிருக்கிறது.”

– இவ்வாறு பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

தமிழகம் முழுவதும் பா.ஜ.க. மாநில தலைவர் அண்ணாமலை மேற்கொண்ட ‘என் மண், என் மக்கள்’ யாத்திரை நிறைவடைகிறது. இதையொட்டி, பல்லடம் அடுத்த மாதப்பூரில் நடந்த பா.ஜ.க. பொதுக் கூட்டத்தில் பிரதமர் நரேந்திர மோடி ‘வணக்கம்’ என்று தமிழில் கூறி தனது உரையைத் தொடங்கினார். இதன்போது அவர் உரையாற்றுகையில்,

“பல்லடம் வந்து இந்தக் கூட்டத்தில் உங்கள் அனைவருடனும் கலந்துகொள்வது எனக்கு மகிழ்ச்சியைத் தருகிறது.

இந்தியாவிலேயே தமிழகம் முதன்மை மாநிலமாக மாறும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. தமிழகம் குறித்து சில விஷயங்களைக் குறிப்பிட்டுச் சொல்வதில் நான் பெருமைக் கொள்கிறேன். 2024 ஆம் ஆண்டு தமிழகத்தில் பா.ஜ.க. குறித்து அதிகமாகப் பேசப்படுகிறது.

தமிழகம் நாட்டின் புதிய அரசியல் வளர்ச்சியில் புதிய ஒரு மையமாக மாறிக்கொண்டிருக்கிறது. அதுமட்டுமல்ல, வரும் 2024 ஆம் ஆண்டில் தமிழகம் ஒரு புதிய சரித்திரத்தைப் படைக்க இருக்கிறது. அதற்கு மிகப்பெரிய சான்றாக இந்த என் மண் என் மக்கள் யாத்திரை சான்றாக இருக்கிறது. தமிழகத்தைச் சேர்ந்த சகோதர, சகோதரிகள், வரலாற்றில் முன்னெப்போதும் இல்லாத ஆதரவை கொடுத்துள்ளனர்.

தமிழக மக்கள் தூய்மையான உள்ளம் படைத்தவர்கள். மிகச் சிறந்த புத்திசாலிகள். எனவே தமிழகத்தை ஆட்சி செய்பவர்களின் அத்தனை நாடகமும் தற்போது வெளியே வந்திருக்கிறது. ஊழல் வெளியே வந்துவிட்டது. இதனால் தான், தமிழகத்தில் பா.ஜ.க .மீது மக்களுக்கு மிகப்பெரிய நம்பிக்கை வந்துகொண்டிருக்கிறது.

தமிழக வளர்ச்சிக்கு பா.ஜ.க. எப்போதுமே முன்னுரிமைக் கொடுத்து வருகிறது. 2004 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரை காங்கிரஸ்–திமுக கூட்டணியில் இருந்தபோது தமிழக வளர்ச்சிக்காக கொடுத்த நிதியை விட கடந்த பத்தாண்டுகளில் மூன்று மடங்கு அதிகமான நிதியை தமிழக வளர்ச்சிக்காக கொடுத்துள்ளோம். தமிழக




வளர்ச்சிக்கான அத்தனைப் பணிகளையும் மத்திய அரசு செய்து வருகிறது. ஆனால், தி.மு.கவும் காங்கிரசும் பல ஆண்டுகளாக கூட்டணியில் இருந்துள்ளனர்.

தமிழகம் வந்தபோது, மறைந்த முதல்வர் எம்.ஜி.ஆர்.என் நினைவுக்கு வந்தார். இலங்கையில் அவர் பிறந்த ஊரான கண்டிக்குச் செல்லும் வாய்ப்பு எனக்கு கிடைத்தது. இன்று அவர் மக்கள் பணியாற்றிய இந்த தமிழகத்துக்கு நான் வந்திருக்கிறேன்.

பத்தாண்டு காலம் அவரது நல்லாட்சி காரணமாக, தமிழகத்துக்கு சிறந்த கல்வியும், சுகாதாரமும் கிடைத்தது. இதனால், தமிழக மக்கள் அவரை பெரிதும் மதித்தனர். இன்று வரை ஏழை மக்கள் ஒவ்வொருவரும் எம்.ஜி.ஆரை ஒப்பற்ற தலைவராக புகழ்ந்து வருகின்றனர். எம்.ஜி.ஆர். குடும்ப அரசியல் காரணமாக அரசியலுக்கு வரவில்லை. அவரது தனிப்பட்ட திறமையின் காரணமாக முதல்வராக வந்து ஆட்சி நடத்தினார்.

இப்போது இண்டியா கூட்டணி என்று உருவாகி உள்ளது. டில்லியில் எல்லாம் இண்டியா கூட்டணி வெற்றி பெறாது என்பது தெரிந்துவிட்டது. ஆனால், தமிழகத்தில் மட்டும் எப்படியாவது கொள்ளை அடிக்க வேண்டும் என்பதற்காக அந்த கூட்டணி முயற்சித்துக் கொண்டிருக்கிறது. 2024 இல் அந்த கொள்ளையடிக்க நினைக்கும் கடையை மூட வேண்டும். இந்த என் மண் என் மக்கள் யாத்திரையின் மூலம் அதற்கான பூட்டை நாம் உருவாக்கி இருக்கிறோம்.” – என்றார்.

# காசா போரை நிறுத்த இஸ்ரேல் விருப்பம்: புதிய தகவலை வெளியிட்டார் ஜோ பைடன்

ஹமாஸ் பிடியில் சிக்கியிருக்கும் பணயக் கைதிகளை விடுவிக்கும் ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டால், இஸ்லாமியர்களின் புனித ரமலான் மாதத்தையொட்டி போர் நிறுத்தத்தை மேற்கொள்ள இஸ்ரேல் உடன்பட்டுள்ளது.”

– இவ்வாறு அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் 7 ஆம் திகதி ஹமாஸ் அமைப்பு இஸ்ரேல் மீது நடத்திய தாக்குதலை தொடர்ந்து, ஹமாஸ் அமைப்பினர் அதிகம் இருக்கும் பாலஸ்தீன பகுதியான காசா நகர் மீது இஸ்ரேல் இராணுவம் தற்போது வரையில் தொடர்ந்து தாக்குதலைகளை நடத்தி வருகிறது. ஆனால் ஹமாஸ் அமைப்பினரும், இஸ்ரேலும் சளைக்காமல் போர் புரிந்து வருகின்றனர். இதற்கிடையே அமெரிக்கா, கட்டார், எகிப்து உள்ளிட்ட நாடுகள் மத்தியஸ்தம் செய்துவருகின்றன.

இந்த நிலையில், காசாவில் நடைபெற்றுவரும் ஹமாஸ் மீதான போரை நிறுத்த இஸ்ரேல் விருப்பம் கொண்டுள்ளதாக அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா, கட்டார், எகிப்து உள்ளிட்ட நாடுகள் மத்தியஸ்தம் செய்துவரும் இஸ்ரேல் – ஹமாஸ் இடையில் போர் நிறுத்த உடன்படிக்கையில் சுமுக முடிவு எட்டப்பட்டால் பரஸ்பர கைதிகள் விடுவிப்பு, 6 வார காலம் தற்காலிக போர் நிறுத்தம் ஆகியவை நிறைவேறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மார்ச் 10 ஆம் திகதி ரமலான் மாதம் தொடங்கவுள்ளது. இஸ்லாமியர்களின் புனித பண்டிகையாக கருதப்படும் இந்த




பண்டிகை தினத்தை முன்னிட்டு இஸ்ரேல் – ஹமாஸ் போர் நிறுத்தம் செய்ய உள்ளதாக தகவல் வெளியான வண்ணம் இருக்கிறது.

இந்த நிலையில், அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் திங்கள்கிழமை ஊடகம் ஒன்றில் பேசும்போது,

“ரமலான் நெருங்குகிறது. பணயக் கைதிகளை வெளியே கொண்டுவர எங்களுக்கு நேரம் தரும் பொருட்டு இஸ்ரேலியர்கள் இந்த மாதத்தில் எந்த போர் நடவடிக்கைகளிலும் ஈடுபட மாட்டோம் என தெரிவித்துள்ளனர். தற்காலிக இடைநிறுத்தத்தின் போது, மீதமுள்ள பணயக் கைதிகளை விடுவிப்பது குறித்து பேச்சுக்கள் தொடரும். அடுத்த திங்கட்கிழமைக்குள் இரு தரப்புக்கும் இடையே நிரந்தர போர் நிறுத்தம் ஏற்படும் என நம்புகிறேன்” – எனத் தெரிவித்துள்ளார்.

# உக்ரைனுற்கு ஆதரவாக மேற்குலகநாடுகள் தங்கள் படையினரை அனுப்பக்கூடும்

## பிரான்ஸ் ஜனாதிபதி வலியுறுத்து



உக்ரேனிற்கு மேற்குலகநாடுகள் தங்கள் படையினரை அனுப்பக்கூடும் என பிரான்ஸ் ஜனாதிபதி இமானுவேல் மக்ரோன் தெரிவித்துள்ளார்.’

பரீஸில் இடம் பெற்ற ஐரோப்பிய நாடுகளின் தலைவர்களுக்கான கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

“உக்ரைனுக்கும் ரஷ்யாவுக்கும் இடையே இடம்பெற்று வரும் யுத்தத்தில் ரஷ்யா வெல்வதை தடுப்பதற்காக எங்களால் ஆனா அனைத்தையும் செய்வோம். நான் இதில் மிகுந்த உறுதிப்பாட்டுடன் தெரிவிக்கின்றேன்.

அத்துடன், மேற்குலக படையினரை ஒருபோதும் உக்ரைனிற்கு அனுப்பகூடாது என்று சொன்னவர்கள், விமானங்களையும் ஏவுகணைகளையும் டிரக்குகளையும் அனுப்பகூடாது எனவும் சொன்னார்கள் தற்போது உக்ரைனிற்கு அதிகளவு ஏவுகணைகள் டாங்கிகளை அனுப்பவேண்டும் என தெரிவிக்கின்றனர்”– என்றார்.

# ரபாவை நகரை நோக்கி படையெடுக்கும் இஸ்ரேல்!





ஹமாஸ் படையினரை முற்றாக ஒழிக்கும் விதமாக இஸ்ரேல் இராணுவம் காஸாவில் தீவிரமாகத் தாக்குதல் நடத்தி வருகின்றது.

இந்த நிலையில், இதன் அடுத்த கட்டமாக சுமார் 14 லட்சம் பலஸ்தீனர்கள் உள்ள ரபா நகரை முற்றுகையிட இஸ்ரேல் இராணும் திட்டமிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, அந்த பகுதியில் இருக்கும் மக்களை வெளியேற்றுவதற்கான திட்டத்தை இஸ்ரேல் இராணுவம் தாக்கல் செய்திருப்பதாக அந்த நாட்டுப் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவின் அலுவலகம் அறிவித்துள்ளது.




# கண்ணீர்ப்புகைக் குண்டு வீசி, நீரைப் பீய்ச்சி அடித்து ஜயவர்தனபுர பல்கலை மாணவரின் பேரணி கலைப்பு!

ஸ்ரீஜயவர்தனபுர பல்கலைக் கழக மாணவர்கள் நேற்று பிற்பகல் முன்னெடுத்த ஆர்ப்பாட்டப் பேரணியின் மீது பொலிஸார் நீர்த்தாரை மற்றும் கண்ணீர்ப்புகை பிரயோகம் மேற்கொண்டனர்.

ஸ்ரீஜயவர்தனபுர பல்கலைக்கழகத்திற்கு அருகில் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

உணவக வசதி, விடுதிகள், மஹபொல மற்றும் அடக்குமுறை சட்டங்கள் உள்ளிட்ட பல பிரச்சினைகளை சுட்டிக்காட்டி இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

## காஸாவிற்கான சிறுவர் நிதியத்தை அமைக்க அமைச்சரவை அனுமதி



காஸாவிற்கான சிறுவர் நிதியமொன்றை அமைப்பதற்கு அமைச்சரவை அனுமதி அளித்துள்ளது.

காஸாவில் இடம்பெற்ற மோதல்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக ஜனாதிபதி இந்த யோசனையை அமைச்சரவையில் சமர்ப்பித்திருந்தார்.

இந்த ஆண்டுக்கான இப்தார் கொண்டாட்டத்திற்காக அனைத்து அமைச்சுக்கள் மற்றும் அரச நிறுவனங்களுக்கும் மேற்கொள்ளப்பட்டிருந்த நிதி ஒதுக்கீட்டை இந்த நிதியத்திற்கு வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு நிவாரணம் வழங்குவதற்காக ஐக்கிய நாடுகள் சபையின் ஊடாக இலங்கை அரசாங்கம் ஒரு மில்லியன் அமெரிக்க டொலர்களை நன்கொடையாகவும் வழங்கவுள்ளது.

நன்கொடையாளர்களும் அதற்கு பங்களிக்க முடியும் என ஜனாதிபதி ஊடகப்பிரிவு குறிப்பிட்டுள்ளது.

இதன்படி, தங்களின் நன்கொடைகளை எதிர்வரும் ஏப்ரல் 11 ஆம் திகதிக்கு முன்னர், இலங்கை வங்கியின் (7010), தப்ரோபன் (747) கிளைகளில் 7040016 எனும் கணக்கு இலக்கத்திற்கு “ஜனாதிபதியின் செயலாளர்“ என்ற பெயரில் வைப்பிலிடுமாறும், அதற்கான பற்றுச்சீட்டை 077- 9730396 எனும் இலக்கத்திற்கு வட்ஸ் அப் ஊடாக அனுப்பி வைக்குமாறும் ஜனாதிபதி செயலகம் கேட்டுக்கொண்டுள்ளது.

## யுக்திய சுற்றிவளைப்புகளில் 730 சந்தேகநபர்கள் கைது



யுக்திய சுற்றிவளைப்பு நடவடிக்கையில் மேலும் 730 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வெலிகம – மிரிஸ்ஸ பகுதியில் முன்னெடுக்கப்பட்ட யுக்திய சுற்றிவளைப்பில் ஐஸ் போதைப்பொருளுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேற்படி நபர்களிடமிருந்து 10 கிராமுக்கும் அதிகமான ஐஸ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

8 லட்சம் பெறுமதியுடைய போதைப்பொருளே இவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ளது.

இதேவேளை, நேற்று கைது செய்யப்பட்டவர்களில் போதைப்பொருள் குற்றங்களுடன் தொடர்புடையவர்கள் 526 பேரும், குற்றத்தடுப்பு பிரிவுகளுக்கு அனுப்பப்பட்டுள்ள பட்டியலில் பெயரிடப்பட்டுள்ள 204 சந்தேகநபர்களும் அடங்குகின்றனர் என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

ஹெரோயின், ஐஸ், கஞ்சா, மாவா உள்ளிட்ட பல போதைப்பொருள்களையும் இந்தச் சுற்றிவளைப்பின் போது பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

போதைப்பொருளுடன் தொடர்புடைய குற்றங்களுக்காகக் கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களில், பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பணியகம் பொலிஸ் விசேட பணியகத்தின் பட்டியலில் இருந்த 24 சந்தேகநபர்களும் உள்ளடங்குகின்றனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



# நல்லூர் விபத்துடன் தொடர்புடைய பஸ்ஸின் வழித்தட அனுமதி தற்காலிக இடைநிறுத்தம்!

யாழ்ப்பாணம் நல்லூர் பகுதியில் கடந்த 23 ஆம் திகதி இடம்பெற்ற விபத்துத் தொடர்பில் பூரண விசாரணை மேற்கொண்டு உரிய சட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையின் வட பிராந்தியத் தலைவருக்கு, வடக்கு மாகாண ஆளுநர் பணிப்புரை விடுத்துள்ளார்.

அதற்கமைய, விபத்துடன் தொடர்புடைய பஸ்ஸின் வழித்தட அனுமதி தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாக பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையின் வட பிராந்திய தலைவர் அறிவித்துள்ளார். அத்துடன் பொலிஸாரின் விசாரணைகளுக்கு மேலதிகமாக தமது அதிகார சபையின் உள்ளக விசாரணைகளை ஆரம்பிக்கவும் நடவடிக்கை எடுத்துள்ளதாக அவர் கூறினார்.

இதேவேளை வடக்கு மாகாணத்திற்குள் சேவையில் ஈடுபடும் அனைத்து மினி பஸ் உரிமையாளர்களுக்கும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகவும், அறிவுறுத்தல்களை பின்பற்றாத பஸ்களின் வழித்தட அனுமதி நிரந்தரமாக இரத்து செய்யப்படும் என அறிவுறுத்தப்பட்டுள்ளதாக பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையின் வட பிராந்தியத் தலைவர் தெரிவித்தார்.

# வடக்கில் மாவட்டங்களுக்கு இடையிலான தனியார் பஸ்கள் சேவைப் புறக்கணிப்பில்!




முறையான பஸ் தரிப்பிடம் இல்லாததால் இன்று முதல் தனியார் போக்குவரத்து சேவைகள் இடம்பெறாது என வட இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் தலைவர் சி.சிவபரன் தெரிவித்துள்ளார்.

அனைத்து மாவட்டங்கள் மற்றும் மாகாணங்களுக்கிடையேயான தனியார் போக்குவரத்து சேவைகள் இடம்பெறாது எனத் தெரிவித்துள்ளனர்.

நேற்றைய தினம் யாழ்ப்பாணத்தில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் ஊடக சந்திப்பில் கருத்து வெளியிடுகையில் கூறியவை வருமாறு:-

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் அழைப்பை அடுத்து யாழ் மாவட்ட தூர சேவைச் சங்கத்தின் பஸ் உரிமையாளர்களும், ஏனைய மாவட்ட சங்கப் பிரதிநிதிகளும் இடையில் நேற்றுக் காலை 8 மணிக்கு மின்சார நிலைய வீதித் தரிப்பிடத்திற்கு சென்ற போது, அமைச்சர் எமது தரிப்பிடம் யாழ் போதனா வைத்தியசாலையின் சேவைகளுக்கு இடையூறாக இருப்பதாகவும் அதனால் சேவையில் ஈடுபடுவதற்காக நிற்கும் பஸ்களை அவ்விடத்தில் தரித்து நிற்க வேண்டாம் என பொலிஸாரின் முன்னிலையில் கூறி அவ்விடத்திற்கு "No Parking" (வாகனங்கள் நிறுத்தக் கூடாது) என்ற அறிவிப்பு பலகையும் வைத்துள்ளனர்.

ஏற்கனவே இலங்கை போக்குவரத்துச் சபையின் ஒத்துழைப்பின்மையால், குறுகிய அதாவது ஒரே நேரத்தில் 04 பஸ்கள் மட்டும் தரித்து நிற்கக் கூடிய மின்சார நிலைய வீதித்தரிப்பிடத்தில் சேவையில் ஈடுபட்ட நாம் தற்போது அமைச்சரின் அறிவுறுத்தலால் 02 பஸ்கள் மட்டும் தரிக்கக் கூடிய தரிப்பு நிலையத்தில் இருந்து இயங்க வேண்டி வந்துள்ளது.

இதனால் அவ்விடத்தில் இருந்து தூரசேவைகளுக்கான சேவைகளை ஆற்ற முடியாதுள்ளது. வெளி மாவட்டங்களில் இருந்து யாழ்ப்பாணம் வரும் பஸ்கள் தரித்து நிற்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இக்கட்டான இந்நிலையில் வடமாகாண வீதிப்பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை எம்மிடம் இருந்து பணத்தை அறவிடுவதில் மட்டும் விழிப்பாக இருக்கின்றது.

நாம் மின்சார நிலைய வீதியில் - சிறிய குறுகிய தரிப்பிடத்தில் இருந்து - மிகக் கஷ்டான சூழ் நிலையில் சேவையில் ஈடுபடுகிறோம். எமக்கான தரிப்பிட வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் முயற்சி எதனையும் மேற்கொள்ளாத அசமந்தப் போக்கே தொடர்கின்றது.

இந்நிலையில் ஐந்து மாவட்டச் சங்கங்களின் பிரதிநிதிகள் ஒன்றிணைந்து மீண்டும் அமைச்சருடன் கலந்துரையாடி, எமது தரிப்பு நிலையத்தில் இருந்து சேவைகளை ஆற்ற முடியாத நிலையைத் தெரிவிக்கும் முயற்சிகள் பலனளிக்காத காரணத்தினால் தூரசேவைகளுக்கான தனியார் போக்குவரத்துச் சேவைகளும், இலங்கை போக்குவரத்துச் சபையின் தூரசேவைகளும் இணைந்து புதிய தரிப்பிடத்தில் இணைந்து சேவைகளில் ஈடுபடும் சூழ்நிலை உருவாகும் வரை வட மாகாணத்திற்குள்ளான அனைத்து தனியார் போக்குவரத்து சேவைகளும் நடைபெற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்பததை அறியத் தருகின்றோம் - என்றார்.




# ஸ்ரீ லங்கன் எயார்லைன்ஸின் 7 விமான சேவைகள் தாமதம்

## மூன்று விமானங்கள் இரத்து

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் இருந்து பல்வேறு சர்வதேச நாடுகளுக்கும் பயணிக்கவிருந்த ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ்க்கு சொந்தமான 3 விமானங்களின் பயணங்கள் இரத்து செய்யப்பட்டுள்ளன.

நேற்று பயணத்தை மேற்கொள்ளவிருந்த 3 விமானங்களின் பயணங்களை இரத்து செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டதாக ஸ்ரீலங்கன் விமான சேவை நிறுவனத்தின் தலைவர் அஷோக பத்திரகே தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் அந்த விமானங்களில் பயணிக்கவிருந்த பயணிகளுக்கு அறிவிக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதனிடையே, நேற்று பயணிக்கவிருந்த 7 விமான சேவைகள் தாமதமடைந்திருந்தனஎனஸ்ரீலங்கன்விமான சேவை நிறுவனம் தெரிவித்துள்ளது.

தொழில்நுட்பக் கோளாறு காரணமாக மேற்படி விமான சேவைகள் தாமதமடைந்துள்ளன என நிறுவனத்தின் ஊடகப் பேச்சாளர் தீபால் பெரேரா தெரிவித்திருந்தார்.

யு.எல் 364, யு.எல் 161, யு.எல் 314, யு.எல் 121, யு.எல் 189, யு.எல் 880 மற்றும் யு.எல் 470 ஆகிய இலக்கங்களைக் கொண்ட விமானங்களின் பயணங்களே இவ்வாறு தாமதமடைந்தன என்று ஸ்ரீலங்கன் விமான சேவை நிறுவனத்தின் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.




## 2,000 கிராம உத்தியோகத்தர்களை சேவையில் இணைக்க நடவடிக்கை

புதிதாக 2,000 கிராம உத்தியோகத்தர்களை சேவையில் இணைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று அரச நிர்வாக அமைச்சின் செயலாளர் ப்ரதீப் யசரத்ன தெரிவித்துள்ளார்.

கிராம உத்தியோகத்தர்களுக்கான பரீட்சை பெறுபேறுகள், பரீட்சைகள் திணைக்களத்தினால் அரச நிர்வாக அமைச்சிற்கு வழங்கப்பட்டுள்ளன.

தகுதி பெற்ற சுமார் 4,000 பேரை நேர்முகப் பரீட்சைக்காக அழைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அரச நிர்வாக அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டுள்ளார்.

நீண்ட காலமாக கிராம உத்தியோகத்தர்கள் சேவையில் இணைத்துக் கொள்ளப்படாமையினால் வெற்றிடங்கள் ஏற்பட்டுள்ளன.

பணிபுரிந்த சிலர் ஓய்வு பெற்றுள்ளமையினாலும் பதவி வெற்றிடங்கள் ஏற்பட்டுள்ளன என்று அரச நிர்வாக அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.




## உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் 380 ஊழியர்களின் பதவிகள் வெற்றிடம்!

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் 380 ஊழியர்களுக்கான வெற்றிடங்கள் காணப்படுகின்றன எனத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதன் காரணமாக தமது சேவைகளை முன்னெடுத்துச் செல்வதில் இடையூறு ஏற்பட்டுள்ளதாக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் சிரேஷ்ட அதிகாரியொருவர் குறிப்பிட்டுள்ளார்.

ஊழியர் பற்றாக்குறை தொடர்பில் நிதி அமைச்சுக்கு அறிவித்துள்ளதாக அந்த அதிகாரி தெரிவித்துள்ளார்.

உதவி ஆணையாளர்கள் 221 பேருக்கும், அலுவலக உதவியாளர்கள் 71 பேருக்கும், முகாமைத்துவ ஊழியர்கள் 88 பேருக்கும் வெற்றிடங்கள் காணப்படுகின்றன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.



# வவுனியா மணிபுரத்தில் இடம்பெற்ற தமிழர் பாரம்பரிய வாழ்வியல் நிகழ்வு

## உள்ளூர் சந்தையும் திறந்து வைக்கப்பட்டது

(கே.வசந்தன்)

வவுனியாவில் பாரம்பரிய வாழ்வியலும் உள்ளூர் சந்தையும் என்னும் நிகழ்வு சிறப்பாக இடம்பெற்றது.

வவுனியா, பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட மருக்காரம்பளை கிராம அலுவலர் பிரிவில் உள்ள மணிபுரம் கிராமத்தில் இந்நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

மருக்காரம்பளை சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோத்தர் என்.ஜெயராணி தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் தமிழர் பாரம்பரிய விளையாட்டுக்கள், நடனங்கள், வாழ்வியல் முறைகளை சித்திரிக்கும் நிகழ்வுகளும் இடம் பெற்று இருந்தன.

இதன்போது முன்பள்ளி மாணவர்களுக்கான சத்துணவு திட்டமும் ஆரம்பித்து வைக்கப்பட்டதோடு உள்ளூர் சந்தையும் திறந்து வைக்கப்பட்டிருந்தது.

இந்நிகழ்வில் வன்னி நாடாளுமன்ற உறுப்பினரும், மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான கு. திலீபன், வவுனியா பிரதேச செயலாளர் நா.கமலதாசன் மற்றும் சமுர்த்தி அதிகாரிகள், ஊர்ப் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டு தமிழர் பாரம்பரியத்தை பார்த்து மகிழ்ந்தனர்.











# வவுனியா - பூந்தோட்டத்தில் மற்றுமொரு மது நிலையமா?

## பொதுமக்கள், வர்த்தகர்கள் எதிர்ப்பு!

**(கே.வசந்தன்)**

வவுனியா, பூந்தோட்டம் பகுதியில் புதிதாக மதுபானசாலை ஒன்று அமைப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் அதற்கு பொதுமக்கள் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

பூந்தோட்டம் பகுதி அதிகமான பொதுமக்கள் பயன்படுத்தும் பிரதேசமாக காணப்படுகின்றது. இந்நிலையில் ஏற்கனவே மதுபான நிலையம் ஒன்று அந்தப் பகுதியில் இயங்கி வருகின்றது. அதற்கு மேலதிகமாக பூந்தோட்டம் சந்தி பகுதியில் பிறிதொரு மதுபான நிலையம் அமைப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் அதற்கு பொதுமக்கள் மற்றும் வர்த்தகர்கள் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

ஏற்கனவே, ஒரு மதுபானநிலையம் இயங்கி வரும் நிலையில் மேலும் ஒரு மதுச்சாலையினை திறப்பதால் கலாசார சீரழிவுகள் அதிகரிக்கும் நிலைமை காணப்படுவதுடன், அந்தபகுதியைப் பயன்படுத்தும் பொதுமக்களும் பல்வேறு அசௌகரியங்களைச் சந்திக்க வேண்டி ஏற்படும் என்றும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, இந்த மதுபான நிலையம் அமைப்பதற்கு எதிராக பூந்தோட்டம் வர்த்தகர் சங்கம் தனது கடுமையான எதிர்ப்பை வெளியிட்டுள்ளது. அதற்கு அனுமதி வழங்கவேண்டாம் என்று கோரி மாவட்ட செயலாளர் மற்றும் பிரதேச செயலாளருக்கும் சங்கத்தின் சார்பில் மகஜர் கையளித்துள்ளனர்.



# வவுனியாவில் தனியார் கல்வி நிலையங்களை ஞாயிறு மூடி அறநெறிக்கல்வியை ஊக்குவிக்குமாறு கோரி ஆர்ப்பாட்டம்

**(கே.வசந்தன்)**

ஞாயிற்றுக் கிழமைகளில் தனியார் கல்வி நிலையங்களிற்கு விடுமுறை வழங்கி அறநெறிக் கல்வியை ஊக்குவிக்குமாறு கோரி ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

நேற்று வவுனியா, வைத்தியசாலை சுற்றுவட்டத்தில் உள்ள தொல்பொருள் திணைக்களத்திற்கு முன்பாக ஆரம்பமாகிய இந்தப் பேரணி வவுனியா மாவட்ட செயலகத்தைச் சென்றடைந்தது. அங்கு மாவட்ட செயலாளருக்கு மகஜர் கையளிக்கப்பட்டது.

ஞாயிற்றுக்கிழமைகளில் தனியார் வகுப்புக்கள் இடம்பெறுகின்றமையால் அறநெறிக் கல்வியை பயில்வதற்கு மாணவர்களால் வருகைதர முடியாதுள்ளது. இதனால் சிறுபிள்ளைகள் உரிய வழிகாட்டல்கள் இன்றி தவறான வழியில் செல்வதற்கான சந்தர்ப்பங்கள் ஏற்படுகின்றன. எனவே ஞாயிற்றுக் கிழமைகளில் தனியார் கல்வி நிலையங்களை நிறுத்தி, அன்றையதினம் அறநெறிக்கல்வியைப் போதிப்பதற்கு வழி ஏற்படுத்தித் தருமாறு ஆர்ப்பாட்டக்காரர்களால் கோரப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் பௌத்த மதகுரு மற்றும் சிங்கள் மக்கள் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.







# இன்றைய ராசி பலன்கள் - 28.02.2024

## மேஷம்

உங்கள் லட்சியங்களை அடைவதற்கு இது ஏற்ற நாள். இன்று வெற்றியும் வளர்ச்சியும் காணப்படுகின்றது. இன்று முக்கிய முடிவுகள் எடுக்கும் மன நிலையில் இருப்பீர்கள்.

பணிகளை குறித்த நேரத்தில் முடிப்பீர்கள். உங்கள் பணிக்கு மேலதிகாரிகளின் பாராட்டு கிடைக்கும்.

உங்கள் துணையிடம் நேர்மறையான உணர்வுகளை பகிர்ந்து கொள்வீர்கள். உங்களின் தரமான நேரத்தை இருவரும் ஒன்றிணைந்து செலவிடுவீர்கள்.

பணப்புழக்கம் சீராக இருக்கும். உங்கள் சேமிப்பு ஆற்றல் உயரும். உங்கள் நிதிநிலைமை மேம்படும்.

இன்று ஆரோக்கியக் குறைபாடு ஏதும் இருக்காது. நீங்கள் ஆற்றலுடன் காணப்படுவீர்கள்.

## ரிஷபம்

இன்று மிகவும் அனுகூலமான நாள். உங்கள் லட்சியங்களை அடைவதற்கான அதிர்ஷ்டம் இன்று காணப்படுகின்றது. உங்களின் உற்சாகமான போக்கால் இன்று வெற்றி கிடைக்கும்.

பணியிடத்தில் உங்கள் திறமைக்கு பாராட்டு கிடைக்க நேரலாம். புதிய வேலை வாய்ப்புகள் நிறைந்து காணப்படும். இது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.

உங்கள் துணையுடன் அன்பான உண்மையான உறவை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

உங்கள் நிதிநிலைமை திருப்திகரமாக இருக்கும். உங்கள் சேமிப்பு அதிகரிப்பதற்கான வாய்ப்பு அதிகம் உள்ளது.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

## மிதுனம்

இன்று ஆக்கப்பூர்வமான நாளாக அமையாது. சிறிய பயணம் மேற்கொள்ளவேண்டியிருக்கும். இன்றுதைரியமும் உறுதியும் குறைந்து காணப்படும். உற்சாகமாக இருக்க வேண்டியது அவசியம்.

உங்கள் பணிகளை ஒழுங்கு முறையுடன் திட்டமிட்டு செயலாற்ற வேண்டியது அவசியம். அதிகப் பணிகள் காரணமாக பணியில் தவறுகள் செய்ய நேரலாம்.

பாதுகாப்பற்ற உணர்வு மற்றும் மருட்சி காரணமாக உங்கள் துணையிடம் கவனமற்ற வார்த்தைகளை உதிர்ப்பீர்கள். இதனை தவிர்க்க வேண்டும். உங்கள் துணையுடன் பக்குவமாக நடந்து கொள்ள வேண்டும்.

பணப்பற்றாக்குறை உங்களுக்கு கவலையை அளிக்கும். பணம் சேமிப்பதையும் கடினமாக உணர்வீர்கள்.

இன்று தலைவலி மற்றும் தொண்டை வலி காணப்படும்.

## கடகம்

இன்று உங்கள் இலக்குகளில் வெற்றி காண விழிப்புடனும் கவனமுடனும் இருக்க வேண்டும். யதார்த்தமான அணுகுமுறை தேவை. இன்று முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வேண்டும்.

உங்கள் பணிகளில் தவறுகள் ஏற்படாமல் இருக்க நீங்கள் மிகவும் கவனம் செலுத்த வேண்டியது அவசியம்.

இன்று உங்கள் துணையிடம் கவனமற்ற வார்த்தைகளை பேசுவீர்கள். உறவில் நல்லிணக்கம் ஏற்பட இதனை தவிர்த்தல் நல்லது.

அஜாக்கிரதை காரணமாக பணம் இழப்பதற்கான வாய்ப்பு உள்ளது. உங்கள் பணத்தை கவனமாகக் கையாள வேண்டும்.

பல் வலி ஏற்பட வாய்ப்புள்ளதால் பற்களில் கவனம் தேவை. உங்கள் உணவிலும் கவனம் தேவை.

## சிம்மம்

இன்று உங்களிடம் நம்பிக்கை நிறைந்திருக்கும். சிறந்த முடிவெடுக்கத்தக்க வகையில் உங்கள் மனநிலை சம நிலையில் இருக்கும்.

நீங்கள் உங்கள் உறுதியான மன நிலை காரணமாக பணியில் சிறப்பாக செயலாற்றுவீர்கள். உங்கள் மேலதிகாரிகளின் முழு ஆதரவைப் பெறுவீர்கள்.

இன்று உங்கள் துணையுடன் அன்பை வெளிப்படுத்தி பழகுவீர்கள். இதனால் இருவரிடையே உறவுப் பிணைப்பு வலுப்படும்.

பணப்புழக்கம் திருப்திகரமாக இருக்கும். பணம் சேமிப்பதற்கான வாய்ப்பு அதிகம் காணப்படும்.

இன்று ஆரோக்கியத்தில் எந்தப் பிரச்சினையும் காணப்படாது. நீங்கள் திடமாக இருப்பீர்கள்.

## கன்னி

இன்று எதிர்பார்க்கும் பலன்கள் கிட்டாது. இன்று சரியான முடிவெடுக்க மனதில் தெளிவாக இருக்க வேண்டியது அவசியம். நெருக்கமானவர்களுடன் உரையாடும்போது கவனமாக இருக்க வேண்டும்.

இன்று பணியிடச் சூழல் கடினமாக இருப்பதாக உணர்வீர்கள். உங்கள் பணிக்கு அங்கீகாரம் கிடைக்கப் பெறாது. இது உங்களுக்கு கவலையை உண்டாக்கும்.

உங்கள் துணையுடன் சிறு பிரச்சினைகள் ஏற்படும். வாக்குவாதங்கள் எழும். இதன் காரணமாக கருத்து வேறுபாடு ஏற்படும்.

இன்று கூடுதல் செலவுகள் காணப்படும். வீட்டைப் புதுப்பிப்பதற்காக பணத்தை செலவு செய்ய வேண்டியிருக்கும்.

இன்று முதுகு வலி ஏற்பட வாய்ப்புள்ளது. ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

## துலாம்

இன்று பாதுகாப்பின்மை உணர்வு காணப்படும். இதனை தவிர்க்க வேண்டும். மனதில் தெளிவு ஏற்பட நம்பிக்கையுடன் செயல்பட வேண்டியது அவசியம்.

பணியிடத்தில் குழப்பம் காரணமாக உங்கள் பணியில் தாமதங்கள் ஏற்படும். சக பணியாளர்கள் அதற்கு காரணமாக அமைவார்கள். எனவே திட்டமிட்டுக் கவனமாகப் பணியாற்ற வேண்டும்.

உங்கள் துணையிடம் அகந்தைப் போக்கை காண்பிப்பீர்கள். இதனால் இருவரிடையே இடைவெளி அதிகரிக்கும்.எனவே அத்தகைய போக்கை தவிர்த்து சகஜமாக இருக்க வேண்டும்.

இன்று பணவரவு குறைந்து காணப்படும். தேவையற்ற செலவுகளும் பொறுப்புகளும் அதிகமாக காணப்படும்.

உங்கள் ஆரோக்கியம் திருப்திகரமாக இருக்காது.

## விருச்சிகம்

உங்கள் தினசரி செயல்களை ஒழுங்கு முறையுடன் ஆற்ற வேண்டும். தியானம் அல்லது ஆன்மீக செயல்களுக்கு நேரம் ஒதுக்க முயன்றால் பலன் கிடைக்கும்.

உங்கள் பணியில் வெற்றி பெற கடுமையாக உழைக்க வேண்டும். பணியிடப் பதற்றத்தை வீட்டுக்குக் கொண்டு செல்லாதீர்கள். இது குடும்ப அமைதியைக் கெடுக்கும்.

உங்கள் மனதில் காணப்படும் பாதுகாப்பின்மை உணர்வு காரணமாக உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான தருணங்களை அனுபவிக்க இயலாது.

இன்று நிதிநிலைமை அனுகூலமாக இருக்காது. கூடுதல் செலவுகள் காணப்படும். உங்கள் தேவைகளை பூர்த்தி செய்ய பணம் கடன் வாங்க நேரலாம்.

மன உளைச்சல் காரணமாக தோள்களில் வலி ஏற்பட வாய்ப்புள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் - 28.02.2024




இன்று சிறப்பான பலன்கள் கிடைக்கும். ஆன்மீக ஈடுபாட்டின் மூலம் உங்கள் முன் இருக்கும் சவாலான சூழ்நிலைகளை கையாண்டு ஆறுதல் பெருவீர்கள்.

இன்று பணியில் வெற்றிகரமான பலன்கள் கிடைக்கும். இன்று பொறுப்புடனும் யதார்த்த அணுகுமுறையுடனும் இருப்பீர்கள். பணியிடச் சூழல் மகிழ்ச்சிகரமாக இருக்கும்.

உங்கள் துணையுடன் அன்பாக இருப்பீர்கள். இருவரும் இனிமையான வார்த்தைகளை பகிர்ந்து கொள்வீர்கள். இருவரிடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

உங்கள் சேமிப்பு அதிகரிப்பதற்கான வாய்ப்புகள் அதிகம். எதிர்பாராத வகையில் பண வரவு காணப்படும்.

உங்கள் மன தைரியம் மற்றும் உறுதி காரணமாக நீங்கள் இன்று முழு ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள்.




இன்று சற்றே அனுகூலம் குறைந்து காணப்படும். உணர்ச்சி வசப்படுதலை தவிர்க்க வேண்டும். அதன் மூலம் தன்னம்பிக்கை இழக்காமல் இருக்க முடியும். சம்பவங்களை லேசாகவும் நகைச்சுவை உணர்வுடனும் எற்றுக் கொள்ள வேண்டும்.

உங்கள் பணிகளை குறித்தநேரத்தில் முடிக்க இயலாது. இதனால் கவலை ஏற்படும். சகபணியாளர்கள் மூலம் சில பிரச்சினைகளை எதிர்கொள்வீர்கள்.

இன்று கட்டுப்பாட்டை இழந்து காணப்படுவீர்கள். இதனை உ'ங்கள் துணையிடம் வெளிபடுத்துவீர்கள். இது உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும். அனுசரித்துப் போகும் அணுகுமுறை தேவை.

தேவையற்ற செலவுகளால் கையிருப்பு பணம் கரையும். பணம் சேமிப்பதற்கான வாய்ப்பு குறைந்து காணப்படும்.




இன்று சிறப்பான நாளாக இருக்கக் காண்பீர்கள். நீங்கள் உங்கள் செயல்களை சுமூகமாக ஆற்ற வேண்டும். இதன் மூலம் வாழ்வின் நன்மை தீமைகளை அறிய இயலும்.

உங்கள் கடின உழைப்புக்கு மேலதிகாரிகளிடம் நன்மதிப்பு பெறுவீர்கள். உங்கள் பணிகளை திறமையுடன் மேற்கொள்வீர்கள்.

உங்கள் இனிமையான வார்த்தைகளால் உங்கள் துணையை மகிழ்விப்பீர்கள். இதனால் நல்ல புரிந்துணர்வு ஏற்படலாம்.

இன்று நிதிநிலைமை சுதந்திரமாக காணப்படும். கணிசமான தொகை சேமிக்கும் வாய்ப்பு உள்ளது.

மன மகிழ்ச்சி காரணமாக இன்று உங்களின் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று பொறுமையுடனும் கட்டுப்பாட்டுடனும் இருக்க வேண்டிய சூழ்நிலை காணப்படும். இன்று தேவையற்ற வாக்குவாதங்களில் கலந்து கொண்டு உங்கள் மதிப்புக்குக் களங்கம் ஏற்படுத்திக் கொள்வீர்கள்.

உங்கள் பணிகளைக் கையாளும்போது கவனமாக இருப்பது நல்லது. சக பணியாளர்களால் சில தொல்லைகள் ஏற்படும். இது உங்களுக்கு வருத்தத்தை அளிக்கும்.

இன்று உங்கள் துணையிடம் உணர்சிவசப்படுவீர்கள். இது உங்கள் இருவரிடையேயான உறவின் மகிழ்ச்சியை பாதிக்கும்.

இன்று பண வரவு செலவு இரண்டும் கலந்து காணப்படும். எனவே நஷ்டம் ஏற்படாமல் இருக்க திட்டமிட்டு சூழ்நிலையை சிறப்பாகக் கையாள வேண்டும்.

